நூலை எழுதியவர் பவநந்தி முனிவர் அவர்கள். அந்த பவநந்தி முனிவர் அவர்கள் வாழ்ந்தது ஒரு குகை; என் தொகுதியிலிருக்கின்ற வள்ளிமலை என்கிற குகையில்தான் அவர் வாழ்ந்திருக்கிறார். அந்தக் குகையை சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும். மக்களுக்குத் தெரியாத வரலாறுகளை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். அது, ஒரு குறுகிய மலைதான். அந்த மலைக்குச் செல்ல வழியில்லை. எனவே, அதை அணுகுகிற வகையில் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும். அதைச் செய்தால், அந்த இடம் சுற்றுலாத் தலமாகும். பவநந்தி முனிவர் யாரென்பதும் மக்களுக்குத் தெரியவரும். காரணம், என்றைக்கோ அவர்கள் எழுதிவிட்டுப் போனார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தக் காலத்தில் நாம் சிறப்பு செய்தால்தான், வருங்கால சமுதாயத்தினருக்கு அவர்களைப் பற்றித் தெரியும். இந்த வரலாறுகளெல்லாம் தெரியாத காரணத்தினால்தான், மக்கள் வேறுவழிகளில் சென்றுகொண்டிருக்கின்றனர். எனவே, என்னுடைய இந்த மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் அமர்கிறேன்.

4. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகளில் முதல் அறிவிப்பாக, என்னுடைய கொள்ளுத் தாத்தா திரு. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்றும், அதில் நூலகமும் அமையப்பெறும் என்ற அறிவிப்பும் உண்மையாகவே எங்களுடைய குடும்பத்திற்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் வைக்கவேயில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் நான் கோரிக்கை வைக்கவில்லை. அங்குள்ள மக்களின் கோரிக்கை அது. இதேபோல, முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இருந்தபோது, என்னுடைய கொள்ளுத் தாத்தா அவர்களுக்கு தேரூரில் சிலை அமைத்துக் கொடுத்து, மரியாதை செலுத்தினார். அப்போதும், நான் கோரிக்கை வைக்கவில்லை. அவராகவே முன்வந்து, அங்குள்ள மக்கள் 40 ஆண்டு காலமாக வைத்த

கோரிக்கையை ஏற்று, அறிவித்தார். அன்றைக்கும் இதேபோல, நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்தேன். ஆகையால், இன்றைக்கு எனக்கொரு இன்ப அதிர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-15

என் குடும்பத்தின் சார்பில் நான் இந்த அவையில் இருந்துகொண்டே நன்றி தெரிவிக்கவில்லையென்றால் அது தவறாக இருக்கும். ஆகையால், நீங்கள் செய்த இந்த இரண்டு அறிவிப்புகளுக்கும் மீண்டும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஆசிய ஜோதி', நாஞ்சில் நாட்டு 'மருமக்கள்வழி மான்மியம்' போன்ற நூல்களையும், 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்பது போன்ற பல்வேறு பாடல்களையும் அவர் எழுதியிருக்கிறார். அவர் வழித்தோன்றலாக, ஒரு பெண்ணாக இந்தச் சட்டசபையில் நான் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த 2 அறிவிப்புகளையும், முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களின் அறிவிப்பையும், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பையும் இந்தச் சபையில் இருக்கும் நேரத்தில், கேட்க எனக்கு வாய்ப்புக் கிடைத்ததை உண்மையாகவே நான் பெருமையாக நினைக்கிறேன். இன்ப அதிர்ச்சிகளைத் தந்து எங்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்துகிறீர்கள். மாவட்ட நூலகத்திற்குக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்று அவருடைய பெயர் இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி, சீக்கிரம் முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: முடித்துவிடுகிறேன். நூலகம் தொடர்ந்து அந்த பெயரில் இயங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக்கொள்கிறேன். திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களுக்கு அரசு விழா எடுக்க வேண்டுமென்று நெடுங்காலமாக அனைவரும் கோரிக்கை வைத்து வருகிறோம். அவருக்கும் அரசு விழா எடுப்பதற்கு அறிவித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு பல்வேறு மூதறிஞர்களுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் இந்தச் சிறப்பு அறிவிப்புகளைச் செய்திருப்பது பலருக்கும், நாட்டு மக்களின் மனங்களில் இடம் பெற்ற ஒன்றாக இருக்கும் என்பதை மனதார தெரிவித்துக்கொண்டு, இதுபோன்ற விஷயங்களை அரசு முன்நின்று செய்வதை நான் வரவேற்கிறேன்,

2019 பிப்ரவரி 14] [திருமதி எஸ். விஜயதரணி]

பாராட்டுகிறேன். இதுபோன்ற பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் நம்முடைய முன்னோடி தமிழ்ச் சமூகங்களுக்கும், பல்வேறு சமூகங்களுடைய உணர்வுகளை அழகாக பிரதிபலித்த முன்னோடிகளுக்கும் சிறப்பு சேர்க்கும் வகையிலே வெளியிட்டிருக்கக்கூடிய அறிவிப்புகளை மனமார நான் பாராட்டி, நன்றி கூறுகிறேன். கூடுதலாக இரண்டு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த மாதம் தப்ளிக் ஜமாத்தினுடைய மாநாடு மிகச் சிறப்பாக திருச்சியிலே நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோருடைய அன்பான வழிகாட்டுதலோடு, நம்முடைய அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு அண்ணன் திரு. வெல்லமண்டி நடராஜன் அவர்களும், அன்புச் சகோதரி மாண்புமிகு அமைச்சர் திருமதி வளர்மதி அவர்களும் அங்கே வருகை தந்து எல்லாவித ஒத்துழைப்புகளையும் தந்ததற்காக ஒரு நன்றியையும், ஹஜ் பயணிகளுக்கு கூடுதலாக 1,500 இடங்கள் வேண்டுமென்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இன்றைய அறிவிப்புகளுக்கு நன்றி சொல்வதோடு முடியுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு சமுதாயத் தலைவர்கள், தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுக்கெல்லாம் மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவித்திருக்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே நானும் ஒரு கோரிக்கையை அவர்கள்முன்

வைத்துக்கொள்ள விரும்புகின்றேன். அன்றைக்கு இந்தியா, முகலாய மன்னர்கள் ஆண்டபோது அடிமைப்பட்டிருந்தது; பின்பு ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டிருந்தோம். ஆனால், இந்தியாவை ஆண்ட ஒரு மன்னர், அயல் நாடுகளுக்குப் படையெடுத்துச் சென்று, அயல் நாட்டில் உள்ளவர்களை அடிமைப்படுத்தி, ஆண்டு, ஆட்சி செய்த மாமன்னன் ராஜ ராஜ சோழன். இன்றைக்கு மஹாராஷ்டிர மாநிலத்திலே எப்படி வீர சிவாஜிக்கு பிரம்மாண்டமான ஒரு சிலை வைத்து பெருமைப்படுத்துகின்றார்களோ அதுபோல், ராஜ ராஜ சோழனை எதிர்கால சந்ததியினரும் தெரிந்துகொள்ளும் வகையிலே, நமது சென்னை மாநகரிலே ஒரு பிரம்மாண்டமான சிலை வைக்க வேண்டுமென்று என்னுடைய தனிப்பட்ட கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த பெரும் தலைவர்கள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு தம் வாழ்வையே அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று பல தியாகங்கள் செய்து தனது இன்னுயிரை நீத்த தியாகச் செம்மல்கள் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தலைவர்களைப் போற்றும் வகையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் சிலைகளையும், மணிமண்டபங்களையும், நினைவுத் தூண்களையும் அமைத்து, அவர்களது பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட வழிவகுத்தார்கள்.

அந்த வகையிலே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இந்த இரண்டாண்டுக் காலத்திலே, திருவாரூரிலே மனுநீதி சோழன் நினைவு மண்டபம், தஞ்சாவூர் மாவட்டத்திலே பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவகம், திண்டுக்கல் மாவட்டத்திலே ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் மணிமண்டபம், கடலூர் மாவட்டத்திலே சுவாமி சகஜானந்தா மணிமண்டபம், கோயம்புத்தூர் மாவட்டத்திலே உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் ஆகியவை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டு நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. அந்த வகையிலே 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை அடையாறில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நடிகர் திலகம் செவாலியே சிவாஜிகணேசன் மணிமண்டபம் 1-10-2017 அன்று பொதுமக்களின் பார்வைக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பிற்பகல் 12-20

2016 ஆம் ஆண்டு முதல் சென்னை காமராஜர் சாலையில், பாரத ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிட வளாகத்தினுள் மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அன்னாருக்கு நினைவு மண்டபம் அமைத்தல்; தூத்துக்குடி மாவட்டத்தில் இசை மேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு நினைவுத் தூண் அமைத்தல்; டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தல்; கடலூர் மாவட்டத்தில் இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு முழுவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைத்தல் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் நூலகத்துடன்கூடிய பாரத மாதா நினைவாலயம் அமைத்தல் ஆகியவற்றுக்கு 55 கோடியே 99 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாயை நிதி ஒப்பளிப்பு செய்து, அரசாணைகள் வெளியிடப்பட்டு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தவகையிலேதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே பெருந்தலைவர்களைப் போற்றும்வகையில், இன்று சட்டமன்றத்தில் விதி 110-ன்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கும்; திருச்சிராப்பள்ளியில் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கும், சர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களுக்கும்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கும்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கும் திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபங்களையும்; நாமக்கல் மாவட்டத்தில், அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு

திருவுருவச் சிலையும்; திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் மணிமண்டபத்தை 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து, நூலகம் அமைக்கவும்; தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள வீரன் சுந்தரலிங்கனார் மணிமண்டபத்தை 75 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைத்து நூலகம் அமைக்கவும் அறிவிப்பு வெளியிட்டமைக்கு செய்தி மற்றும் விளம்பரத் துறையின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடு, தேனி மாவட்டத்திலே கர்னல் ஜான் பென்னி குவிக் அவர்களின் பிறந்த நாளன்று, ஆண்டுதோறும் அரசின் சார்பில் மரியாதை செலுத்தி, அரசு விழாவாகக் கொண்டாடவும்; ஈரோடு மாவட்டத்தில் காளிங்கராயன் அவர்களுக்கு, ஆண்டுதோறும் காளிங்கராயன் தினத்தன்று அரசின் சார்பில் மரியாதை செலுத்தி அரசு விழாவாகக் கொண்டாடவும்; சென்னை எழும்பூரில் அமைந்துள்ள வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அன்னாரின் பிறந்த நாளன்று, ஆண்டுதோறும் அரசின் சார்பிலே மரியாதை செலுத்தி அரசு விழாவாகக் கொண்டாட அறிவித்தமைக்கும்; சென்னையில் அமைந்துள்ள சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, அன்னாரின் பிறந்த நாளன்று, ஆண்டுதோறும் அரசின் சார்பில் மரியாதை செலுத்தி அரசு விழாவாகக் கொண்டாட அறிவித்தமைக்கும்; சென்னை எழும்பூரில் அமைந்துள்ள தமிழர் தந்தை என்று போற்றப்பட்ட சி.பா. ஆதித்தனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, அன்னாரின் பிறந்த நாளன்று ஆண்டுதோறும் அரசின் சார்பில் மரியாதை செலுத்தி அரசு விழாவாகக் கொண்டாட, மேற்கூறிய சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே தொடர்ந்து நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், மக்களின் விருப்பங்களை, தேவைகளை, எண்ணங்களை, உணர்வுகளை எடை போட்டு ஈடேற்றுகின்ற வகையிலே பணியாற்றுகின்ற ஜனரஞ்சகமான முதலமைச்சர் என்பதை நிரூபித்துள்ளார்கள். அவர்கள் அறிவித்த அறிவிப்புகளுக்கு கோடானு கோடி நன்றிகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து, அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2019 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் பேசியதற்குப் பிறகு, நீங்கள் எழுந்து நிற்பது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறார், நீங்கள் எழுந்து. . . (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இங்கே சில கோரிக்கைகளை வைத்தார்கள். அதற்கு விளக்கம் அளிக்கின்றேன்.*

ஒன்று. வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி தியாகராயர் அவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள், சென்னை மாநகராட்சி வளாகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு ஏற்கெனவே அரசு சார்பில் மாலை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

இரண்டாவது, ஐராவதம் மகாதேவன் அவர்களது நூல்களை அரசுடைமையாக்க, ஏற்கெனவே என்னால் அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விடுதலைப் போராட்ட வீரர்களையும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், சமுதாயத்தின் ஒற்றுமைக்காகவும், எல்லா இன மக்களும் சகோதர, சகோதரிகளாக, இனம், சாதி, மதம் மறந்து, சமுதாயத்தில் மகிழ்ச்சியோடு வாழ்ந்திட வித்திட்ட எண்ணற்ற தலைவர்களை நினைவுகூரும் வகையிலும், போற்றும்வகையிலும், நாளைய சந்ததியினருக்கு வரலாற்றை எடுத்துச்சொல்லும் வகையிலும், தன்னலம் கருதாது உழைத்திட்ட மாமனிதர்களுக்கு, தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மணிமண்டபம், திருவுருவச் சிலை, அரசு விழா, நினைவுத்தூண் என எண்ணற்ற அறிவிப்புகளை இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.*

தமிழுக்கு தன்னைத் தந்த கீழப்பழுவூர் சின்னசாமிக்கும், தமிழனுக்கு தண்ணீர் தந்த கர்னல் பென்னி குவிக்குக்கும் பெருமை சேர்த்த மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே செயல்படுகின்ற

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு வெளியிட்டுள்ள அறிவிப்புகள், தியாகச் சீலர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் அறிவிப்புகள். பாசத் தாயின் வழியிலேவந்த அரசின் பாராட்டு அறிவிப்புகள். விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்தைப் போற்றும் அறிவிப்புகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) விரைவிலே அதற்கு மகிழ்ச்சியைத் தெரிவிப்பேன்.

5. 12-2-2019 அன்று விவசாயக் கடன் தள்ளுபடி குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சர் தெரிவித்த கருத்திற்கு விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன? (குறுக்கீடு) இதுசம்பந்தமாகவா, வேறு ஏதாவதா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

பிற்பகல் 12-25

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இதே அவையில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சில விளக்கங்களைச் சொல்கிறபோது, விவசாயிகளுடைய கடன் தள்ளுபடியைப்பற்றி விவாதம் நடைபெற்ற நேரத்தில், 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நீங்கள் கடன் தள்ளுபடி செய்வதாகச் சொல்லி வழங்கியிருந்தாலும், அதற்குரிய சான்றிதழ்களெல்லாம் நீங்கள் வழங்கவில்லை' என்று இங்கே அழுத்தந்திருத்தமாகச் சொன்னது மட்டுமல்ல, 'அதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்' என்ற நிலையிலே, அவர் கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார். அவருடைய உரை என்னுடைய கையிலே இருக்கிறது. இப்போது என்னுடைய கையிலே, எங்களுடைய ஆட்சியில் யார், யாருக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே கடன் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதற்கான ஆதாரங்களும்; சான்றிதழ்கள் வழங்கப்பட்டதற்கான ஆதாரமும் இருக்கிறது. இதை நான் தங்களுடைய பார்வைக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

உதாரணமாக, சிலவற்றைத்தான் நான் கொண்டு வந்திருக்கிறேன்; எல்லாவற்றையும் கொண்டுவரவில்லை. அதில், 'பி. சண்முகம், திருவண்ணாமலை மாவட்டம், தச்சம்பாடி